### மூளை முடக்குவாதம் என்பதை எவ்வாறு உறுதி செய்வது?

பல்வேறு துறைச் சார்ந்த நிபுணர்களான பிசியாடிரிஸ்ட் (Physiatrist) இயன்முறை சிகிச்சையாளர் (Physiotherapist) தொழில்வழிச் சிகிச்சையாளர் (Occupational Therapist) சிறப்புக் கல்வியாளர் (Special Educator) மற்றும் உளவியல் நிபுணர்களின் (Psychologist) ஆய்வுக்கு பின் இக்குழந்தைக்கு மூளை முடக்குவாதம் உள்ளதா என்பதை உறுதி செய்யலாம்.

### இக்குழந்தையை எப்படி முன்னேற்றம் அடையச் செய்யலாம்

மேற்கூறிய நிபுணர்களின் உதவியின் மூலமாக உதவி உபகரணங்கள், மறுவாழ்வு சிகிச்சை, தொழில் பயிற்சி கல்வி மற்றும் தொழிற் பயிற்சி மூலமாகவும் வாழ்க்கையை மேம்பாடு அடையச் செய்யலாம்.

**பிற சிகிச்சை முறைகள்**

- நியூரோடெவலப்மென்டல் தெரபி (NDT)

  இது குழந்தையின் வளர்ச்சி நிலையை மேம்படுத்தும்.

- உணர்வுகள் ஒருங்கிணைப்பு பயிற்சி (SIT)

  உணர்வுகள் ஒருங்கிணைந்து சூழ்நிலைக்கேற்ப உடலை கட்டுப்படுத்துவது.

- பயோமெக்கானிக்கல் அப்ரோச்

  இது எலும்பு இணைப்புகளின் அசைவுகளை அதிகப்படுத்தி வளர்ச்சியை தூண்டும்.

- ஆரம்பகால சிகிச்சை (Early Intervention)

  இது குழந்தையின் வளர்ச்சித் திறன், நுண்ணறிவுத்திறன், மொழித்திறன் மற்றும் சூழ்நிலைத்திறன் வளர்ச்சிகளை மேம்படுத்தும்

- சிறப்புக் கல்வி பயிற்சி

  கல்வி செயல்களை கற்றல், கவனித்தல், வாசித்தல் மற்றும் உள்ளடங்கிய கல்வி ஆகியவற்றின் பயிற்சி திட்டத்தை வடிவமைத்தல் கால அட்டவணைகளுடன் கூடிய பயிற்சி அளித்தல்

- பேச்சுப் பயிற்சி (Speech Therapy)
- மாற்று மொழித்திறன் பயிற்சி (Augmentative & Alternative Communication)
- படம் பரிவர்த்தனை மூலம் தொடர்பு கொள்ளுதல் பயிற்சி (Picture Exchange Communications)
- சுயவாழ்க்கையை மேம்படுத்திக் கொள்ள தொழிற் பயிற்சி (Independent Life Skill Training)
- மருத்துவம்
- அறுவை சிகிச்சை செய்தல்
- மாறுபட்ட மற்றும் முறையற்ற எலும்பு அமைப்பு சீராக்குதல்



- நடத்தை சீரமைப்பு பயிற்சி

**நன் நடத்தையை மேம்படுத்தி தேவையற்ற வேண்டாத நடத்தைகளை சீராக்குதல்**

- விளையாட்டுக் கல்வி மற்றும் இசைப்பயிற்சி

**NIEPMD ல் உள்ள சேவைகள்**


- மருத்துவ சேவை (Medical Service)
- இயன்முறை சிகிச்சை (Physiotherapy)
- தொழில் வழிசிகிச்சை (Occupational Therapy)
- பேச்சு மற்றும் மொழித்திறன் சிகிச்சை (Speech & Language Therapy)
- ஆரம்ப கால சிகிச்சை (Early Intervention)
- சிறப்புக் கல்வி (Special Education)
- மறு வாழ்வு உளவியல் சிகிச்சை (Rehabilitation Psychological Therapy)
- தொழில் கல்விப் பயிற்சி (Vocational Training)
- செயற்கை அவையங்கள் (Prosthetic and Orthotic)
- ஆலோசனை வழங்குதல் (Counselling)

**நினைவுக்கு:**

ஆரம்ப காலத்திலேயே குறைபாடுகளை கண்டுபிடித்து, இதற்கு மறுவாழ்வு பயிற்சிகள் மூலமாக ...த்தின் தன்மையை குறைத்து பாதுகாப்பான வ...ங்கள் குழந்தைக்கு கொடுக்கலாம்.

இந்த பிரசுரத்தை பதிவிறக்கம் செய்ய மேலே உள்ள QR குறியீட்டை க்ளிக் செய்யவும்

# மூளை முடக்குவாதத்தை தெரிந்து கொள்வோம்



NIEPMD

सत्यमेव जयते


## ஒன்றுக்கும் மேற்பட்ட ஊனமுற்றோரின் மேம்பாட்டிற்கான தேசிய நிறுவனம்

(மாற்றுத்திறனாளிகள் மேம்பாட்டுத்துறை, சமூக நீதி மற்றும் அதிகாரம் வழங்கல் அமைச்சகம், இந்திய அரசு)

கிழக்கு கடற்கரை சாலை, முட்டுக்காடு, கோவளம் அஞ்சல்
சென்னை - 603 112, தமிழ்நாடு

தொலை பேசி : 044 27472046, 27472113, 27472423, 27472104
தொலை நகல் : 044 27472389
மின் அஞ்சல் : niepmd@gmail.com | மின் அலை : www.niepmd.tn.nic.in


**வேலை நேரம் : திங்கள்–வெள்ளி காலை 9 மணி முதல் மாலை 5.30 மணி வரை**

**விடுமுறை : சனிக்கிழமை, ஞாயிற்றுக்கிழமை மற்றும் மத்திய அரசு விடுமுறை நாட்கள்**

மாற்றுத் திறனாளிகள் பயன்படுத்தும் வகையில் சிறந்த இணையதளம் (வெப்சைட்) உருவாக்கியதற்கான தேசிய விருது (2011) மற்றும் மாற்றுத் திறனாளிகள் எந்த தடையும் இன்றி செல்லும் வகையில் சிறந்த கட்டமைப்பு ஏற்படுத்தியதற்காக தேசிய விருது (2012) பெற்ற நிறுவனம்

**இலவச தொலைபேசி : 1800-425-0345**

### மூளை முடக்குவாதம் என்றால் என்ன?

மூளை முடக்குவாதம் மூளையில் ஏற்படும் பாதிப்பு காரணமாக ஏற்படுகிறது. இதனால் மூளை முழுவதும் பாதிக்கப்படுவதில்லை. எனினும் இதனால் உடலின் இயக்கங்கள் மற்றும் நிலை நிறத்துதலில் பாதிப்பு ஏற்படுகிறது இது கர்பகாலத்தின்போதோ, பிறக்கும் போதோ, பிறந்த பின்னரோ. கிருமிகள் தொற்று மற்றும் மூளை காயப்படுவதாலும், மூளையின் ஏதேனும் ஒரு பகுதியில் பாதிப்பு ஏற்படுகிறது இப்பாதிப்பு மேலும் தீவிரமாகவோ, வளரவோ, மாறவோ செய்யாது.


### மூளை முடக்கவாதத்தின் பாதிப்பு விகதம்:

உலகில் பிறக்கும் 1000 குழந்தைகளில் 2 முதல் 3 குழந்தைகளுக்கு மூளை முடக்குவாதம் காணப்படுகிறது.

### மூளை முடக்குவாதத்திற்கான காரணங்கள் யாவை?

சில பொதுவான காரணங்கள்

- குறைமாத பிரசவம்
- குழந்தை பிறக்கும்போது குழந்தைக்கு ஆக்ஸிஜன் பற்றாக்குறை
- பிறப்பின் போது குழந்தையின் தலையில் காயம் ஏற்படுதல்
- மூளையில் இரத்தக் கசிவு
- இரத்தத்தில் சர்க்கரை அளவு குறைதல்
- கற்பகாலத்தின் போது கருவுற்ற தாய்மார்கள் மருத்துவர் ஆலோசனை இன்றி மருந்து உட் கொள்ளுதல் மற்றும் போதை மருந்து பயன்படுத்தல்.
- வைரஸ் மற்றும் பிற தொற்று நோய்கள்
- இரத்தம் ஒவ்வாமை மற்றும் உறவு திருமணம்




### மூளை முடக்குவாதத்தின் பல்வேறு வகைகள் யாவை?

### நரம்பியல் சம்பந்தமான பாதிப்பின் வகைகள்

- இசிப்பு வாதம் (Spastic)
- ஒத்தியங்காமை குறைபாடு (Athetoid)
- இயங்காற்றல் குறைபாடு (Ataxic)
- தளர்வு வாதம் (Flaccid)
- கலப்பு வாதம் (Mixed)

Classification by Number of Limbs Involved




### உடம்பின் பாதிப்பைப் பொறுத்துள்ள வகைகள்

- ஒற்றைவாதம் (மோனோபிளீஜியா)
- இரண்டுறுப்பின் வாதம் (டைபிளீஜியா)
- மூன்றுருப்பின் வாதம் (ட்ரைபிளீஜியா)
- பக்கவாதம் (ஹெமிபீளீஜியா)
- நான்குருப்பின் வாதம் (குவாட்ரிபிளீஜியா)
- கீழ்பக்கவாதம் (பாராபிளிஜயா)

### மூளை முடக்குவாதத்துடன் இணைந்த பிற குறைபாடுகள்.

- நுண்ணுணர்வு பாதிப்பு
- மன எழுச்சிக் குறைபாடு
- வலிப்பு நோய்
- காது கேளாத்தன்மை
- பார்வையின்மை
- ஆட்டிஸம் பாதிப்பு
- கற்கும் திறன் பாதிப்பு
- பேச்சு மொழித்திறன் குறைபாடு
- மனவளர்ச்சி குன்றிய தன்மை

### மூளை முடக்குவாதத்தின் அறிகுறிகள் யாவை?

- பிறந்த ஒரு மாதத்திற்கு பின்பும் கண்களை இடம், வலமாக அசைக்க இயலாமை
- 3 - 5 மாதத்திற்குப்பிறகும் கழுத்து நிற்காமை
- உடல் அசைவுகள் ஒருங்கிணைப்பின்றி காணப்படுதல்
- தசைகளில் விரைப்புத்தன்மை அதிகமாக காணப்படுதல்
- நடக்கும் போது கால்கள் பின்னிக்கொள்ளுதல் அல்லது அகலமாக வைத்து நடத்தல்
- வாயில் எச்சில் வடிதலை கட்டுப்படுத்த இயலாமை
- உடம்பின் அசைவுகள் தாமதமாக ஒழுங்கற்று இருத்தல்
- கண்களின் அசைவுகள் பாதிப்படைதல் மாறுபட்டிருத்தல்

மேற்கூறியவற்றில் ஒன்றோ அல்லது அதற்கு மேற்பட்டோ காணப்பட்டால் இக்குழந்தைக்கு மூளை முடக்குவாதம் இருக்கலாம்.

